**பொறலஸ்கமுவ நகர சபை**

**கொழும்பு மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 07 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பொறலஸ்கமுவ நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 60,440,955 தொகையைக் கணக்கு வைக்கும் போது காசு அடிப்படையும், அட்டுறு அடிப்படையும் என்ற இரண்டும் பயன்படுத்தப்பட்டமையால் முத்திரை வரி வருமானம் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளளிப்புச் செய்யப்படாத சம்பளம் ரூபா 4,646,537 தொகை 2017 சனவரி மாதம் மீளளிப்புச் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அந்தத் தொகை சம்பள மீளளிப்பு கடன்பட்டோர் கணக்கில் செலவு வைக்காமல் வருமான உதவிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையால் சம்பள மீளளிப்பு கடன்பட்டோர் கணக்கினதும் வருமான உதவிக் கணக்கினதும் மீதிகள் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) வறுமையை இல்லாதொழிக்கும் செயற்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 325,000 பெறுமதியான 10 தையல் இயந்திரங்கள், தளபாடம் மற்றும் உபகரணத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டமையால் தளபாடமும் அலுவலக உபகரணங்களினதும் கணக்கு மீதி அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 1999 முதல் 2014 ஆம் ஆண்டு வரை நன்கொடை மற்றும் கொள்வனவுகளாக பெறப்பட்ட 05 வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 பெற வேண்டிய கணக்குகள்**

(அ) 2011 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற அனுமதிப்பத்திர வருமான மீதி ரூபா 56,700 தொகையை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 16,905 தொகையான முன்செலுத்திய மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2008 ஆம் ஆண்டில் முச்சக்கர வண்டி பழுதுபார்ப்பதற்காக வழங்கப்பட்ட ரூபா 12,000 தொகையான முற்பணம் சரியாக கணக்கு வைக்கப்படாமையினால் முற்கொடுப்பனவுகள் முற்பணக்கணக்கின் கீழ் தீர்க்கப்படாத மீதியொன்றாகக் காணப்பட்டது.

**1.3.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் முற்செலுத்தப்பட்ட முற்பணக் (எரிபொருள் வைப்பு) கணக்கு என்ற இரண்டினதும் கூட்டுமொத்தம் 86,850 தொகையான மீதிகள் உரிய பட்டோலை மற்றும் வைப்புச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திரகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| (i) நிதிப்பிரமாணம் 110 | - | நட்டம் மற்றும் இழப்பு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 396(ஈ) | 55,712 | வழங்கப்பட்டிருந்த போதும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய 03 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 571 | 59,465 | 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப்பிரமாணம் 751 மற்றும் மாநகர சபை கணக்குகள் கோவையின் களஞ்சியப் பொருட்களுக்காக | - | சபைக்குச் சொந்தமான களஞ்சியப் பொருட்களுக்காக இருப்புப் புத்தகம் பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் பொருட்களை விநியோகித்தல் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்குகள் தொடர்பான ஆலோசனை | | பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 880, 881, 891(1) மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்தின் 612 ஆவது அத்தியாயம் | - | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களில் அனேகமானோர்களிடமிருந்து பிணைப் பணம் பெறப்படாதிருந்ததுடன் பிணைப் பதிவேடும் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | நிதிப்பிரமாணம் 1645 | - | நாளாந்த ஓட்ட அட்டவணைகளில் நேரம் மற்றும் தூர அளவுகள் குறிப்பிடப்பட்டு முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | நிதிப்பிரமாணம் 1645(அ) | - | வாகன சம்பவத் திரட்டு புத்தகங்களில் டயர் ரியூப், பற்றரி மாற்றுதல்கள், பழுதுபார்த்தல் மற்றும் விபத்துக்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டு முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | நிதிப்பிரமாணம் 1646 | - | சபைக்குச் சொந்தமான 11 வாகனங்களின் ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ix) | நிதிப்பிரமாணம் 1653 | - | சபைக்குச் சொந்தமான 09 வாகனங்களுக்கு மைலோ மீற்றர் நீண்டகாலமாக செயலிழந்து காணப்பட்டது. |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | - | சபைக்குச் சொந்தமான 28 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2012 சனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தி | - | ஒப்பந்தங்கள் கையளிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு 03 ஒப்பந்தங்களை விட ஒரே நேரத்தில் செய்ய முடியாதிருந்த போதிலும் ஒப்பந்தங்களைக் கையளிக்கும் போது அதற்கு முரணாக ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. |
| (ஈ) | மாநகர சபை, நகர சபைகளுக்கான கணக்குகள் கோவை | 109,727,030 | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 67,215,767 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 28,029,078 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரியும் வரியும் | 26,700 | 24,829 | 28,726 | 13,973 | 26,451 | 27,807 | 19,623 | 17,350 |
| வாடகை | 1,426 | 935 | 1,017 | 254 | 1,427 | 1,571 | 1,204 | 287 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 512 | 377 | 377 | - | 463 | 401 | 338 | 63 |
| ஏனைய வருமானம் | 47,027 | 2,060 | 48,058 | 276 | 36,082 | 42,585 | 41,249 | 1,336 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட ஆதனவரி ரூபா 24,828,615 ஆக இருந்த போதிலும், அதில் ரூபா 10,326,983 தொகை அதாவது 41.59 சதவீதத்தை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 13,973,104 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 50,000 இனை விஞ்சிய 10 ஆதனவரி அலகுகளிலிருந்து ரூபா 722,996 தொகையொன்று அறவிடுவதற்கு இருந்தது.

(இ) அறவிட முடியாத ஆதனவரி மீதியான 193,407 தொகையை பதிவழிப்பதற்காக விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

(ஈ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 17,349,832 ஆக இருந்த போதிலும், அதில் மீளாய்வாண்டின் போது ரூபா 16,918,396 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமையால் ரூபா 431,436 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.2.3 வாடகை

(அ) மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட கடை வாடகை வருமானம் ரூபா 935,100 ஆக இருந்த போதிலும், அதில் ரூபா 799,763 தொகை அதாவது 85.5 சதவீதம் மாத்திரம் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குரிய 26 கடைகளிலிருந்து ரூபா 189,064 தொகையான வாடகை மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 ஆம் ஆண்டில் முத்திரையிடப்பட்ட 02 கடைகளின் நிலுவை வாடகை ரூபா 76,292 தொகை அறவிட முடியாதிருந்ததுடன் அந்த கடைகளை மீண்டும் கேள்வி கோரி வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் பெறக்கூடியதாக இருந்த வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2017 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகை மீதி ரூபா 287,328 ஆக இருந்த போதிலும், அதில் ரூபா 104,399 தொகையை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

(அ) மீளாய்வாண்டிற்குரிய 157 வியாபார இடங்களிலிருந்து ரூபா 197,800 தொகையான வியாபார மற்றும் கைத்தொழில் வரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 36,000 தொகையான நிலுவை வியாபார வரி மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 முத்திரைக் கட்டணம்

(அ) மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட முத்திரை வருமானம் ரூபா 30,000,000 ஆக இருந்த போதிலும், ஆண்டில் உரிய தொகையிலிருந்து பெறுவனவுகள் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) 2017 ஒக்தோபர் 24 ஆந் திகதிய கடிதத்தில் உள்ளடக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக பரீட்சித்து கொழும்பு காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 3,655,100 தொகையான முத்திரை வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் அந்த வருமானத்தை சபை இழந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

(அ) செயற்திட்டத்திற்காக மதிப்பீடு தயாரிக்கும் போது வீதிக்கு காபட் இடல் மற்றும் உப வீதிகளை அபிவிருத்தி செய்தல் என்ற ஒரே விடயத்திற்காக பயன்படுத்தப்பட்ட விலை வீதத்திற்கிடையே வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) வீதி நிர்மாணம் மற்றும் வடிகாண் முறைமைகளை நிர்மாணிப்பதற்காக மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது கட்டிடத்தின் கட்டணப் பட்டோலைகளிலும் (BSR), வீதி கட்டணப் பட்டோலைகளிலும் (HSR) விலை வீதங்களின் தொடர்பு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) சபை நிதியத்திலிருந்து அமுல்படுத்தப்பட வேண்டிய ரூபா 12,048,526 பெறுமதியான 14 செயற்திட்டங்கள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்து கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், காலதாமதத்தின் பின்னர் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) சபை நிதியத்திலிருந்து அமுல்படுத்தப்பட்ட 21 செயற்திட்டங்களிலிருந்து 06 செயற்திட்டங்களின் வேலைகள் 2018 ஏப்ரல் 20 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

(அ) 2017 ஆம் ஆண்டில் வகைப்படுத்தப்பட்ட 493.62 தொன் கழிவுப் பொருட்கள் மற்றும் வகைப்படுத்தப்படாத 9,653.27 தொன் கலப்பு கழிவுப் பொருட்கள் என்பன கறதியான கழிவுப் பொருள் தளத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், வகைப்படுத்தப்பட்ட கழிவுப் பொருளின் அளவு, வகைப்படுத்தப்படாத கழிவுப்பொருளின் அளவில் 5.1 சதவீதமாகும்.

(ஆ) கழிவுப்பொருட்களை வகைப்படுத்தல் சிறந்த மட்டத்தில் காணப்படாததுடன் கழிவுப்பொருட்களைச் சேகரித்தல் உரிய பிரகாரம் முகாமைத்துவம் செய்யப்படாமையினால் ரூபா 7,239,952 தொகையை மேலதிகமாகச் செலுத்தவதற்கு சபைக்கு ஏற்பட்டிருந்தது.

(இ) கழிவுப்பொருட்களை அகற்றும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 150,000 தொகையான நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 79,490 தொகையான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் ஊழியர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்டநிலை | 03 | 01 | 02 | - |
| மூன்றாம் நிலை | 01 | 01 | - | - |
| இரண்டாம் நிலை | 34 | 30 | 04 | - |
| ஆரம்ப நிலை | 111 | 106 | 05 | - |
| ஏனையவை | | | | |
| - அறுண உதான | 03 | 02 | 01 | - |
| - அமையத் தொழிலாளர் | - | 02 | - | 02 |
| | 152 | 142 | 12 | 02 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் 12 வெற்றிடங்களை நிரப்புவதற்கு சபை தவறியிருந்தது. அவ்வாறே 02 அமைய தொழிலாளர் பதவிகளில் மிகைகள் காணப்பட்டன.

(ஆ) சிரேஷ்ட நிலையில் 02 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டமையின் காரணமாக சபையின் நடவடிக்கைகளை செயற்றிறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(இ) 2017 திசெம்பர் இல் உள்ளவாறு நிலுவை ஊழியர் கடன் மீதி ரூபா 12,535,231 ஆக இருந்த போதிலும் அதில் 2009 முதல் 2016 வரையான காலப்பகுதியில் 07 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 113,891 தொகையான கடன் மீதியை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஈ) 2009 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பணியிடமாற்றம் பெற்றுச்சென்ற 06 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 349,923 தொகையான கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

(அ) வீதி விளக்கு முறைப்பாட்டு பதிவேடு நாளதுவரையாக்கப்படாதிருந்தமையால் முறைப்பாடுகள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளின் வினைத்திறனை பரீட்சிக்க முடியாதிருந்தது.

(ஆ) ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டு ஆதனவரி அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், 2009 ஆம் ஆண்டின் பின்னர் ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்படாமையினால் புதிய மதிப்பீட்டில் மாற்றங்களை மேற்கொள்வதன் தேவை தொடர்பில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) பொதுச் சந்தை கடை இலக்கம் 23 இல் வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்ற போதிலும், 2014 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சிட்டையிடப்பட்ட வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

அரச நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆளுகை தொடர்பான அமைச்சினால் 2015 ஆம் ஆண்டின் போது சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 3,232,282 பெறுமதியான சிறிய ரக கெப் வண்டி, ரூபா 24,928,666 பெறுமதியான மோட்டார் கிறேடர், ரூபா 17,649,179 பெறுதியான பெகோ இயந்திரம் மற்றும் ரூபா 7,967,144 பெறுமதியான வைப்ரேட் உருளை என்பவற்றை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

நீண்ட காலமாக செயற்பாடற்ற நிலையில் காணப்படுகின்ற இரண்டு வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.3 வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 654,438 தொகையான காலாவதியான பொருள் இருப்பை உள்ளடக்கி வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

(அ) ஆண்டின் போது வருமானம் மற்றும் செலவின விடயங்களுக்கிடையே நிதிஏற்பாடுகளை மாற்றியதன் பின்னரும் பாதீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையே 2.98 சதவீதம் முதல் 812.11 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்ட 16 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பாதீட்டு மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் 31 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 8,546,000 தொகையான மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் 16 செலவின விடயங்களின் சேமிப்பு நிதிஏற்பாட்டில் 37 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் செயற்பாடுகள் முறையாக ஒழுங்கமைக்கப்படாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுக் கூட்டம் ஆகக்குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டிற்காக 02 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டமை.<br>(ii) கணக்குகளில் குறைத்தும் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டமை |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வருமான நிர்வாகம் | (i) | நிலுவை வருமானம் அறவிடப்படாமை |
| | | (ii) | வரி மதிப்பீடு உரிய காலத்தில் இடம்பெறாமை |
| (இ) | ஒப்பந்த நிர்வாகம் | | மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படாமை |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | வருமான மதிப்பீடு சாத்தியமானதாக தயாரிக்கப்படாமை. |
| | | (ii) | வருமான செலவின விடயங்களில் கணிசமான முரண்கள் காணப்பட்டமை |
| (உ) | கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | | நிலுவை மீதிகள் தீர்த்து வைக்கப்படாமை |
| (ஊ) | ஊழியர் கடன் முகாமைத்துவம் | | கடன் மீதிகள் ஒழுங்குமுறையாக அறவிடப்படாமை |
| (எ) | இருப்புக் கட்டுப்பாடு | | இருப்பு பேரேடு நாளதுவரையாக்கப்படாமை |
| (ஏ) | நிலையான சொத்துக்களின் நிர்வாகம் | (i) | சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டமை |
| | | (ii) | நிலையான சொத்துக்கள் கணக்கு வைக்கப்படாமை. |